1970 மார்ச் 12]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : டெல்லி அரசாங்கம் ஏற்கனவே இந்தப் பல்கலைக்கழகம் இங்கே அமைய வேண்டும் என்றுதான் வற்புறுத்திக்கொண்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சமீபத்திலே பஞ்சாப்புக்குச் சென்றபொழுது அங்கேயிருக்கிற துணைவேந்தரோடு கலந்துபேசி, லூதியானாப் பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டும் வந்திருக்கிறார்கள். 1968-ஆம் ஆண்டு வேளாண்மை இயக்நர், டீன், அக்ரிகல்சுரல் காலேஜ், டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பெண்ட்ரி, டைரக்டர் ஆப் வெட்டரினரி சர்விஸஸ், டீன், அக்ரிகல்சுரல் காலேஜ், மதுரை, அக்ரோநாமிஸ்ட், அக்ரிகல்சுரல் காலேஜ், மதுரை இவர்கள் ஆறு பேர்களைக்கொண்ட குழுவை நியமித்து இன்னும் பல பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்புகளின் மீதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று பார்வையிட்டுவந்த விவரங்களை வைத்துக்கொண்டும் புதிய மசோதாவைத் தயார்செய்து கொண்டிருக்கிறோம். இந்த மசோதாவை நிறைவேற்றியதற்குப் பிறகு எப்படியெல்லாம் நடத்தலாம் என்பதுபற்றி முடிவெடுக்கலாம்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவையிலே வேளாண்மைக் கல்லூரி இருக்கிறது. அங்கே போதுமான வசதிகள் இருக்கின்ற காரணத்தினால் இந்த நடைமுறை ஆண்டிலேயே இந்தப் பல்கலைக்கழகத்தை அங்கே துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கோவையிலே இதற்கு வாய்ப்புகள் இருப்பதால்தான் அங்கே இந்தப் பல்கலைக்கழகத்தைக் கொண்டுவரவேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. முதலிலே இதற்கான மசோதாவை நிறைவேற்றவேண்டும். அதற்காகத்தான் நான் முதலிலேயே சொன்னபடி மசோதாவைத் தயார் செய்து கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டமன்றத் தொடர் கூடத்திலேயே கொண்டுவரலாம் என்று நம்புகிறேன்.

ஏம்பலில் அரிசன விடுதி

*** 332 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் கூற்றத்திலுள்ள ஏம்பலில் பயிலும் மாணக்கருக்கு வசதியாக அங்கு அரிசன நல விடுதியொன்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏம்பலில் ஒரு அரசினர் மாணவர் இல்லம் துவக்கும் குறிப்பு அதைப் போன்ற மற்ற செயற்குறிப்புகளுடன் தகுதிக்கேற்ப நாளடைவில் அரசினரால் பரிசீலனை செய்து ஆணை விடுக்கப்படும்.

[1970 மார்ச் 12

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் சுற்றத்தின் கடைக்கோடியிலிருக்கும் திருக்களம்பூரிலே ஒரு அரிசன நல விடுதி அமைப்பதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறதா, அதனுடைய விவரத்தை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: திருமயத்தில் இருக்கும் ஏம்பலில் அமைப்பது பற்றியதுதான் கேள்வி. எந்த ஊரிலே விடுதி அமைக்கவேண்டுமென்றாலும் பக்கத்திலே உள்ள ஊர்களிலிருந்து எத்தனை மாணவர்கள் வந்து படிக்கிறார்கள், அப்படிப் படிக்கின்ற மாணவர்களில் எத்தனை பேர்கள் 5 மைலுக்கு அப்பாலிருந்து வந்து பயிலவேண்டியிருக்கிறது, ஒரு விடுதி அமைக்கவேண்டிய அவசியத்திற்கு மாணவர்களின் தொகை இருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்து அவசியமென்று கருதினால் மாவட்ட நல அதிகாரி அவர்கள் அதைப் பற்றி இயக்குநர் அவர்களுக்குச் சிபாரிசு செய்தால் அரசாங்கம் பரிசீலனைசெய்து முடிவெடுக்கலாம். ஏம்பலில் விடுதியமைப்பதற்கு இயக்குநருக்குப் பூரணத் தகவல்கள் வரவில்லை. எந்த ஊரிலே அமைக்கவேண்டுமென்றாலும் மாவட்ட நல அதிகாரி சிபாரிசு செய்தால் கவனிக்கலாம்.

நந்தனார் பெண்கள் ஆரம்ப ஆதாரப்பள்ளிக் கட்டடம்

* 333 வினா—**திரு. எஸ். சிவசுப்ரமணியன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் ஓமக்குளம் ரோட்டில் இருக்கும் அரசாங்க நந்தனார் ஆரம்ப ஆதாரப் பெண் பள்ளிக்கென தனிக் கட்டடம் ஒன்று கட்ட அரிசன நல இலாக்காவால் போடப்பட்ட எஸ்டிமேட் எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: குறிப்பிட்ட கட்டடப் பணி டிசம்பர் 1969-ல் துவங்கப்பெற்று தொடர்ந்து நடைபெறுகின்றது.

Mat Weaving Industry.

* 334 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether any protection has been offered by the State Government to the mat weaving industry?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பாய்முடைவோர் கூட்டுறவுச் சங்கங்களை அரசு அமைத்துள்ளது. அவற்றிற்கு நிதி உதவியையும் வழங்குகின்றது. தமிழ் நாடு கைப்பணிகள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் விற்பனை வசதி செய்து கொடுக்கப்படுகிறது.